**தேயிலை ஆராய்ச்சி சபை - 2021**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| | உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா.101,864,100 கிரயமான தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான 92 | நுவரெலியா பிரதான மோட்டார் வாகன பரிட்சிப்பு உள்ளடங்கலாக மதிப்பீட்டு குழுவினால் இதுவரையிலும் | முழுமையாக தேய்விடப்பட்ட எனினும் தொடர்ந்தும் |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் வாகனங்கள், மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா.12,168,584 ஆன புனித ஜோக்கிம் தோட்டத்திற்கு சொந்தமான 10 வாகனங்கள், ரூபா.7,094,000 கிரயமான புனித கோம்பஸ் தோட்டத்திற்கு சொந்தமான 08 வாகனங்கள் மற்றும் ரூபா 31,792,070 கிரயமான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92 (ஆ) பந்தியின் பிரகாரம் அது தொடர்பில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்திராததுடன் இச்சொத்துக்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட வலுவானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட்டு மீண்டும் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தலவாக்கலை நிலையத்திலுள்ள வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து உப மத்திய நிலையங்களிலும் தோட்டங்களிலும் உள்ள வாகனங்களை மதிப்பீடு செய்யும் பணிகள் 2022 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதுடன் குறித்த அறிக்கைகள் கிடைத்த பின்னர் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய/ஈட்டப்பட்ட தேறிய காசப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது முறையே ரூபா.3,340,023 மற்றும் ரூபா.3,683,396 பெறுமதிகள் தவறுதலாக சீராக்கப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட வட்டி செலவினம் ரூபா 4,123,220 மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 4,518,953 காசுப்பாய்ச்சல் கூற்றில் தனித்தனியாக சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதனால் நீதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணகீட்டு நியம | ரூபா.1,108,864.00 ஆன வட்டி தவறுதலாக கணக்கு வைக்கப்படவில்லை என்பதுடன் நானாவித வருமானங்களின் கீழ் ரூபா 1,018,864.00 தொகை இடர் கடன் வட்டி மற்றும் வாடகை வருமானம், காசுப்பெறுவனவுகள் மாத்திரம் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டமை வலுவொன்றாவதுடன் அனைத்து வட்டி பெறுவனவுகளும் (ரூபா.4,518,953) மற்றும் கொடுப்பனவுகள் (ரூபா.4,123,220) தவறுதலாக ஆண்டுக்கான தேறிய மிகை பற்றாக்குறையின் கீழ் / சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 2022 ஆம் ஆண்டில் சரியான முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்கம் 02 இன் விதிகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் தலவாக்கலை, இரத்தினபுரி, ஹந்தான, பசற மற்றும் கொட்டவ ஆகிய பிரதேச அலுவலகங்களில் காணப்பட்ட பெறுமதிமிக்க 5,654 மரங்கள் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆகஸ்ட் 24 ஆம் திகதி இடம்பெற்ற 2022/06 ஆம் சபை கூட்ட அறிக்கையின் பிரகாரம் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 5, 654 உஸ்செவன கன்றுகளை மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக வன பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் உள்ளடங்கலாக குழுவொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் அந்த கன்றுகளை மதிப்பீடு செய்யும் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதுடன் குறித்த அறிக்கைகள் கிடைத்த பின்னர் கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், உயிரியல் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் ரூபா.4,712,672 தொகையான முதலீட்டு வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா.1,131,041 ஆன வருமான வரித்தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானத்தின் அடிப்படையில் வருமான வரி செலுத்துவதற்கு அவசியமா என்பது தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தெளிவுபடுத்தும் குழுவின் செயலக பிரிவிற்கு 2021.04.05 ஆம் திகதி தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் பதில் கிடைக்கவில்லை. அதனால் மீண்டும் வினவும் கடிதமொன்று 2022.09.08 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் | உள்நாட்டு இறை வரி அதிகார சட்டத்தின் பிரகாரம் முதலீட்டு வட்டி வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வருமான வரித்தொகை கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அக்கடிதத்திற்கு கிடைக்கும் பதிலின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். | |
| (ஆ) | சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் கடன்பட்டோரின் அடிப்படையில் 05 சதவீத ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளும் போது புனித கூம்பஸ் மற்றும் புனித ஜோக்கிம் ஆகிய தோட்டங்களின் கணக்குகளில் உள்ளடங்கியுள்ள முறையே ரூபா.999,406 மற்றும் ரூபா.406,143 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதி தொடர்பில் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் கடன்பட்டோர் மீதிகளுக்கு உரிய ஐயக்கடனுக்காக 05 சதவீத ஒதுக்கத்தினை மேற்கொள்ளல் கணக்கீட்டு கொள்கையாகும். சபையின் அறவிடமுடியா கடன் ஒதுக்கத்தினை மேற்கொள்ளும் கணக்கீட்டு கொள்கை தவறுதலாக புனித கூம்பஸ் மற்றும் புனித ஜோக்கிம் தோட்டங்களுக்காக கருத்திற்கொள்ளப்பட்டிராததுடன் 2022 ஆம் ஆண்டு முதல் அக்கொள்கையை கருத்திற்கொண்டு இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணக்க ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் ரூபா 7,413,550 தொகைக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனங்களின் உரித்து தேயிலை ஆராய்ச்சி சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இது தொடர்பில் பதிவுகளின் மூலமோ நிதிக்கூற்றுக்களிலோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படக்கூடிய நிலையில் நிலைமையில் இல்லாத இந்த மூன்று வாகனங்களை பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தி கழிவு புகை அறிக்கைகளை பெற்று வருமான அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உரித்து மாற்றப்படாத வாகனங்கள் தொடர்பில் கணக்கு பதிவுகளின் மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரித்து துரிதமாக சுவீகரிக்கப்பட வேண்டும். அதனை மேற்கொள்ளும் வரையில் 03 வாகனங்கள் தொடர்பில் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தோட்டங்களிலிருந்து பெற வேண்டிய பகுப்பாய்வு வருமானம் ரூபா.346,320 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டினுள் இந்த மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய பகுப்பாய்வு வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புனித கூம்பஸ் தோட்டத்தின் 2010 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற மற்றும் 02 வருடங்களை கடந்த நானாவித இருப்பு வழங்குநர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா.1,791,492 தொகையான கடன் கொடுத்தோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இம்மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது உரித்து கோரப்படாமை உறுதிப்படுத்தப்பட்டால் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி.571(3) | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் | ஒப்பந்தங்களில் நிலவிய குறைபாடுகள் காரணமாக | தீர்ப்பனவு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரையிலும் ஒப்பந்தங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா.3,551,559 தொகையான பணம் 02 வருடங்களை கடந்திருந்த போதிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை விடுவிக்காது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டுள்ளது. இது வரையிலும் ரூபா.2,623,897 தொகையான பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை நிறைவு செய்த ஒப்பந்ததாரர்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 02 வருடங்களை கடந்த எஞ்சிய ரூபா.927,662 ஆன பிடிகாசினை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அல்லது உரித்து கோரப்படாமை உறுதிப்படுத்தப்பட்டால் வருமமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| நி.பி.756(9) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்படும் காலச்சட்டகத்தின் அடிப்படையில் சபை 2021 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையை எதிர்வரும் நிதியாண்டின் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பு வேண்டிய போதிலும் 2022 ஜூலை 31 ஆம் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் இதுவரையிலும் நிறைவு செய்யப்படவில்லை. போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் நிலவிய சிக்கல்களின் அடிப்படையில் உப மத்திய நிலையங்களிலிருந்து கைத்தவிர்பதற்கு நிமித்தமாக உள்ள பொருட்களை பரீட்சித்தல் மற்றும் சேகரிக்கும் பணிகள் தாமதமடைந்துள்ளது.<br><br>மேற்படி பணிகளை நிறைவு செய்து 2022 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் குறித்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிற்கடமை நியமனங்களை வழங்க வேண்டியது நிரந்தர நியமனமொன்றை வழங்கும் வரையிலும் தற்காலிகமாக அடிப்படையிலேயே ஆன போதிலும் சபையின் மேலதிக பணிப்பாளர் பதவி, சிரேஷ்ட கணக்காளர் பதவி, 01 பொறியியலாளர் பதவி. 04 பிரிவு தலைவர் பதவிகள் மற்றும் மேலும் 04 பதவிகள் 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையிலும் நிரந்தர நியமனமொன்றினை மேற்கொள்ளாது தற்காலிக பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா.1,508,773 ஆன பதிற்கடமை படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | மேலதிக பணிப்பாளர் பதவியை நிரப்புவதற்கு 2021 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி நேர்முக பரீட்சைகளை நடாத்தி 2021.04.05 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>சிரேஷ்ட கணக்காளர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் 2022 மார்ச் 02 ஆந் திகதி முதல் தேயிலை ஆராய்ச்சி சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளார்.<br><br>வதியும் பொறியியலாளர் பதவியினை நிரப்புவதற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள ஏனைய விண்ணப்பதாரர்களும் நியமனத்தை கையேற்பதை நிராகரித்துள்ளனர்.<br><br>04 பிரிவு தலைவர் பதவிகளுக்கு உள்ளக பதவி உயர்வுகளே வழங்கப்படும் என்பதுடன் தகைமையுடை உள்ளக விண்ணப்பதாரர்கள் காணப்படாமையால் பணி மெய்வுகை அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்க நேர்ந்துள்ளது. வலையமைப்பு நிர்வாகத்தர் எனும் பதவிக்காக 2021.05.03 ஆம் திகதி இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் 2021.08.27 ஆந் திகதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக பதிற்கடமை நியமனத்திற்கு பதிலாக நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். |

சேவையிலிருந்து விலகிச்சென்றுள்ளார்.

தொழில்நுட்ப (MA 2-2) முகாமைத்துவ உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியம்) வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள போதிலும் BD/CBP/01/01/04 மற்றும் 2022.04.26 ஆந் திகதிய தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 03/2022 மூலம் பொதுத்துறையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமையால் முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியம்) பதவியில் கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் (Attending to the Duties) உத்தியோத்தர் ஒருவரை நியமிக்க நேர்ந்துள்ளது. சேவை தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் விசேட அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு உரிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான சபையினால் ரூபா.81,980,000 தற்காலிக வைப்புக்களில் முதலீடு செய்யும் போது அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக 2008 ஆம் ஆண்டு வரையிலும் நடாத்திச் செல்லப்படும் நிதியங்கள் மற்றும் புனித ஜோக்கீம் தோட்டத்தின் வருமானங்களால் உருவாக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா.81,980,000 ஆன தொகை 2008 ஆம் ஆண்டின் போது மற்றும் 2013 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினை பெற்று குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உரிய அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியினை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பீஈடீ/12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பிரிவு | மனிதவள முகாமைத்துவத்திற்காக சட்டங்கள், விதிகளை உருவாக்குவதற்குரிய செயல்வழி கையேடொன்றினை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இதுவரையிலும் பெறுகை நடைமுறையை பின்பற்றி அலுவலக கையேட்டினைப் பின்பற்றி அலுவலக கையேட்டினை தயாரிப்பதற்காக கூறுவிலைகள் கோரப்பட்டதுடன், அதன் பிரகாரம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் (SLIDA) அலுவலக கையேட்டினை தயாரிப்பதற்காக திணைக்கள பெறுகைகள் குழு (சிறு) அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br><br>அதன் பிரகாரம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு மூலம் (SLIDA) 03 மாதங்களினுள் அலுவலக | மனிதவள நிர்வாகத்திற்கான நடைமுறை நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு திறைசேரியிள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கையேட்டினை தயாரித்து நிறைவு செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அலுவலக கையேட்டினை தயாரித்து பொது திறைசேரியின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 70,206,000 ஆன பற்றாக்குறை ஆனதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 48,058,726 ஆகும். அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூபா 22,147,274 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு புனித ஜோக்கின் தோட்டத்தின் மற்றும் புனித கூம்பஸ் தோட்டத்தின் பற்றாக்குறை கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 34,291,896 அதிகரித்தமை இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2021 | 2020 | விலகல் நலன் / (நட்டம்) சதவீதமாக |
|---|---|---|---|
| **<u>வருமானம்</u>** | **ரூபா. 000** | **ரூபா. 000** | |
| மொத்த வருமானம் | 437,774 | 477,732 | (8) |
| ஏனைய வருமானங்கள் | 23,037 | 29,235 | (21) |
| புனித ஜோக்கிம் மற்றும் புனித கூம்பஸ் ஆகிய 02 தோட்டங்களின் நட்டம் | 52,662 | 18,370 | (187) |
| **<u>செலவினம்</u>** | | | |
| ஏனைய செலவினங்கள் | 3,613 | 1,934 | (87) |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஏனைய வருமானங்கள் 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், அதற்காக பகுப்பாய்வு ரீதியான சேவைகளின் அடிப்படையில் வருமானம் 40 சதவீதத்தினால் மற்றும் முதலீட்டின் அடிப்படையிலான வட்டியானது 30 சதவீதத்தினால் தாக்கமளித்திருந்ததுடன், புனித ஜோக்கிம் மற்றும் புனித கூம்பஸ் தோட்டங்களின் நட்டமானது 187 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை பிரதானமாக 8 சதவீதத்தினால் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த வருடத்தில் அறிக்கையிடப்பட்ட 2.25:1 ஆன நடைமுறை விகிதம், மீளாய்வாண்டின் போது 3:1 ஆக மற்றும் விரைவுச் சொத்து விகிதம் கடந்த வருடத்திலான 1.6:1 வீதத்திற்கு ஒப்பாக 2.2:1 ஆக அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த இரு வீதங்களினதும் அதிகரிப்பிற்காக கடந்த வருடத்திற்கு ஒப்பாக 130 சதவீதத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளடியாக காசு, காசுக்கு சமனானவையிலான அதிகரிப்பு நேரடியாக தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. காசு மற்றும் காசுக்கு சமனானவற்றை விட அதிக நிதி ரீதியான இலாபமொன்று உருவாகும் வகையில் முதலீடொன்றினை மேற்கொண்டு பொருத்தமான விரைவுச் சொத்து வீதமான 1:1 மட்டத்தில் பேண சபை தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 12,554,583 செலவிடப்பட்டு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட (Walk in Type Environmental Controlled Facility) எனும் பெயருடைய உபகரணம் நான்கு வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த உபகரணத்தின் நிறுவுதல், ஒப்படைத்தல் மற்றும் செயற்பாடு எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமையின் அடிப்படையில் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்த முடியாததாக காணப்பட்டது. இந்த கொள்வனவு தொடர்பில் தொழில்நுட்ப மற்றும் பெறுகைகள் குழுக்களினால் எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன, இந்த செயற்திட்டத்திற்காக அமைச்சிடமிருந்து கிடைத்த பணத்தில் இந்த செலவினங்களை மேற்கொண்ட பின்னர் எஞ்சிய தொகையான ரூபா 3,454,050 தொகை நிதிக்கூற்றுக்களில் நடைமுறை செயற்திட்டங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கண்ட விவகாரம் தொடர்பாக, தீர்ப்பனவுச் சபையில் புகார் அளிக்கும் பூர்வாங்க பணிகள் நடந்து வருகின்றன. இதன்படி, பிரதிவாதி தரப்பு சத்தியக் கடதாசி மூலம் மத்தியஸ்த சபைக்கு உண்மைகளை முன்வைத்துள்ளதுடன், அதன் நகல் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த சத்தியக் கடதாசியை சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், அது தொடர்பான கணக்கீட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். | சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தி நட்டத்தினை அறவிட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வாகல்தூவ, தெனியாய மற்றும் கொட்டவா பிரதேச அலுவலகங்களில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் ரூபா.72,031,804 செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணிகளின் உரித்தினை முறையே அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனி மற்றும் அரசுக்கு சொந்தமாக காணப்படுவதுடன், சபைக்கு சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில், வலஹந்துவ தோட்டம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது. தற்போது காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் வலஹந்துவ தோட்டத்தின் மண் மற்றும் தாவர போஷாக்கு ஆய்வு கூட காணியுடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் கையகப்படுத்தியுள்ள நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கும் வரையிலும் தேயிலை ஆரராய்ச்சி நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் 1 ஹெக்டேருக்கு மேற்பட்ட காணிக்கான சட்ட உரிமையை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.<br><br>கொட்டாவ மதியுரை மற்றும் வியாபிப்பு நிலையத்தினால் பயன்படுத்தப்படும் காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளதுடன், யக்கலமுல்ல உதவி பிரதேச செயலாளர் வந்து காணியை பார்வையிட்டு சிபாரிசுகளை வழங்கியுள்ளார்.<br><br>தெனியாய மதியுரை மற்றும் விரிவாக்க நிலையம் நடாத்திச் செல்லப்படும் தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்குரிய தெனியாய தோட்டத்தின் மேல் பகுதியில் கள இலக்கம் 2 இன் | குறித்த காணிகளின் உரித்தினை சபைக்கு கோருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 5 ஏக்கர், 2 ரூட், 1.95 பேர்ச் பரப்பளவான காணித்துண்டின் சட்ட ரீதியான உரித்தினை சுவீகரிப்பதற்கு கொட்டபல பிரதேச செயலாளரை சந்தித்ததுடன், முதலில் காணியை அரசாங்கம் சுவீகரித்து, காணியின் சட்டப்பூர்வ உரிமையை நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என்றார். இதன்படி, காணியின் தற்போதைய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு, பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சினால் பிரதேச செயலாளரின் பரிந்துரையை தென் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பி வைப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| (ஆ) | முழுமையான சம்பளத்துடனான வெளிநாட்டு கல்வி விடுப்பினை பெற்று வெளிநாடு சென்று மீள சேவைக்கு வருகை தராத 04 உத்தியோகத்தர்கள் 2005 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது சபையுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை மீறப்பட்டதால் குறித்த பிணை முறி பெறுமதியான ரூபா 15,054,891 தொகையை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீள அறவிட முடியாதிருந்தது. சபையினால் சட்டத்திற்கு அமைவாக வழக்குகளை முன்னெடுத்த போதிலும், குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் 2011 ஆம் ஆண்டு முதல் 02 வழக்குகளை நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. | பிணை முறி ஒப்பந்தங்களை மீறி பணிக்கு திரும்பாத 04 அதிகாரிகளுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.<br><br>முக்கிய குற்றவாளியான டாக்டர். டி.பி.பீ ஹேரத்/முன்னாள் ஆராய்ச்சி உதவியாளர் வெளிநாடு சென்றுள்ளார். கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இலக்கம் DMR/4019/11 இன் கீழ் பிணையளிப்பவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இறுதியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள போதிலும், உத்தரவாததாரர்கள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர்.<br><br>முக்கிய குற்றவாளியான கலாநிதி. திருமதி பீ.ஏ.பி.குரே - முன்னாள் ஆராய்ச்சி உதவியாளர் காலமானார். பிணையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதான கடனாளியும், பிணையாளர்களில் | குற்றம் சாட்டப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய மாற்று செயல்முறைகளை ஆராய்ந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஒருவரும் உயிரிழந்துள்ளதால், எஞ்சியுள்ள ஒருவருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விசாரிப்பதற்காக வழக்கு கோவை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதான பிரதிவாதியான கலாநிதி சம்பத் வல்கம - முன்னாள் ஆராய்ச்சி உதவியாளர் வெளிநாடு சென்றுள்ளார். அவர் மீதும், பிணையாளர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டு பிணையாளர்களும் இறந்துவிட்டதால், முக்கிய குற்றவாளிகள் கிடைக்காததால் வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், திரு. சம்பத் வல்கம தற்போது Lethbridge College, Faculty of Agriculture, Canada கல்லூரியில் ஆலோசகராகப் பணிபுரிகிறார் என்பது உறுதிசெய்யப்பட்டதால், ரூபா.4,409,891 பணத்தை உடனடியாக நிறுவனத்திற்கு திருப்பி செலுத்துமாறு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்துக்கு இன்னும் பதில் வரவில்லை. இந்த விடயத்தை சட்டமா அதிபரிடம் பரிந்துரைத்ததையடுத்து, சட்டமா அதிபர் திரு வல்கமவை அழைப்பாணை விடுக்க தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

பிரதான பிரதிவாதியான முன்னாள் நன்னடத்தை அதிகாரி லலித் குணதிலக்கவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு 11 முறை நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டும், பிரதிவாதி அந்த வழக்குகளில் எதிலும் ஆஜராகவில்லை. இதனால், வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடமை நேரத்தினுள் ஏற்பட்ட ஒழுக்காற்று விசாரணைக்கு காரணமாக அமைந்த மோசடி தொடர்பில் அந்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இருவரில் ஒருவர் குறித்த சம்பவம் வெளியானதுடன் நிறுவனத்தில் சேவையிலிருந்து இராஜினாமா செய்வதற்கு கடிதமொன்றினை அனுப்பி இருந்ததுடன் தாபன விதி கோவையின் v அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவுக்கு முரணாக அந்த ராஜினாமா நிறுவனத்தின் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப மற்றும் முறையான விசாரணை நடவடிக்கைகளுக்கு அவரை அழைப்பதற்கோ அல்லது அது தொடர்பில் அவரின் கருத்தினை பெற்றுக்கொள்வதற்கோ அதற்கமைய நிறுவனத்தின் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடமை நேரத்தினுள் ஏற்பட்ட மோசடியொன்று தொடர்பில் 2019.05.29 ஆந் திகதி ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு ஊழியருக்கு குற்றப்பத்திரிகையும் வெளியிடப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய நபர் ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு முன்னர் அதாவது 2019.04.17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவனத்தின் ஒழுக்காற்று அதிகாரிக்கு தமது இராஜினாமாவை தொலைநகலின் ஊடாக அனுப்பி இருந்தார். தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரினால் இராஜினாமா நிராகரிப்பதற்கு போதிய விடயங்கள் இல்லாதிருந்தமையால் 2019.04.24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அந்த எழுத்து மூல இராஜினாமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் இராஜினாமை செய்த குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அவரது கூற்றினை பெற்றுக்கொள்வதற்கு 2019.07.15 ஆந் திகதி தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை தருமாறு 2019.07.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கை மேற்கொண்ட போதிலும் அவர் 2019.07.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வருகைதர முடியாது என தெரிவித்திருந்தார். | ஒழுக்காற்று விசாரணையை எதிர்கொள்ளவிருக்கும் ஒரு அதிகாரியின் இராஜிநாமாவை ஏற்றுக்கொண்ட பணிப்பாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனித கூம்பஸ் மற்றும் லெமியா தோட்டத்தின் செயற்பாட்டு கணக்கு (Working Account) இன் பிரகாரம் தோட்டத்தில் | 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 04 ஆந் திகதி முதல் தோட்ட ஊழியர்களின் நாளாந்த சம்பளம் ரூபா.1,000 வரை உயர்வடைந்தமையால் | மனிதவள வருமானம் மற்றும் செலவினத்தை முகாமை செய்வதன் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | கடந்த 2018 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியான நட்ட நிலைமையொன்று அறிக்கையிடபடுவதுடன் அது மீளாய்வாண்டளவில் ரூபா.41,052,214 ஆன நட்டம் வரையிலும் அதாவது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 234 சதவீத நட்ட நிலைமையொன்று அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் 01 கிலோ தேயிலையின் மேதிய விற்பனை சராசரி (NSA) மற்றும் 01 கிலோ தேயிலையின் உற்பத்தி கிரயம் (COP) ஆகியவற்றை ஒப்பிடும் போது தொடர்ச்சியாக உற்பத்தி கிரயத்தில் அதிகரிப்பொன்று காண்பிக்கப்படுவதுடன் மீளாய்வாண்டின் 01 கிலோ தேயிலையின் நட்டம் ரூபா.222 எனும் உயர்வான பெறுமதி அறிக்கையிடபட்டுள்ளமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | அது நேரடியாக தோட்டத்தின் உற்பத்தி கிரயத்தின் அதிகரிப்பில் தாக்கம் அளித்தது. அதற்கமைய மிகை ஊதிய படிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளும் ஊழியர்களின் சேவையாற்றிய மொத்த காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்டு ரூபா.24,238,454 ஆன பெறுமதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக புனித கூம்பஸ் தோட்டத்தின் மே மாதம் முதல் யூன் மாதம் வரையிலும் தனிமைப்படுத்தப்பட்டு காணப்பட்டது. அக்காலத்தில் முற்றிய தேயிலை கொழுந்தினை வெட்டி அகற்றுவதற்கு மேலதிக கிரியமொன்று ஏற்பட்டதுடன் அந்த அத்தியாவசியமான கவ்வாத்தின் காரணமாக பல மாதங்களின் தேயிலை கொழுந்தின் குறைவிற்கு தாக்கமளித்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் நிலவிய பாதகமான பொருளாதார நிலைமையின் அடிப்படையில் தேயிலை விற்பனை விலையில் அதிகரிப்பொன்று இடம்பெறாமையால் தேறிய விற்பனை சராசரி பெறுமதியில் அதிகரிப்பொன்று இடம்பெறவில்லை. | இலாபத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புனித கூம்பஸ் மற்றும் லெமிலியா தோட்டத்தின் கடந்த வருடத்தில் ரூபா.52,574,301 தொகையான உள்நாட்டு தேயிலை விற்பனை வருமானமானது மீளாய்வாண்டில் ரூபா.34,587,956 ஆக காணப்பட்டதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அது ரூபா.17,986,345 இனால் அதாவது 34 சதவீதத்தில் குறைவடைந்தமை, ஆசிய | 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக தேயிலை உற்பத்தியானது கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் வீழ்ச்சி அடைந்தமை உள்நாட்டு தேயிலை விற்பனை வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கு தாக்கமளித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழான தாய் | மனிதவள வருமானம் மற்றும் செலவினத்தை முகாமை செய்வதன் மூலம் இலாபத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் இந்த தாய் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் இலாபம் மற்றும் தேயிலை மத்திய நிலையத்தின் இலாபம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா.1,217,158 இனால் குறைவடைந்தமை மீளாய்வாண்டில் இடம்பெற்ற அதிக நட்ட நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் தேயிலை கிளைகளின் விற்பனை கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு 2021 ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை தாக்கமளித்திருந்ததுடன் அதன் காரணமாக அதன் காரணமாக தாய் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் இலாபம் குறைவடைந்துள்ளது. அவ்வாறே புனித கூம்பஸ் தோட்டம் மே மாதம் முதல் ஜுன் மாதம் வரையிலும் தனிமைப்படுத்தப்பட்டு காணப்பட்டமையால் தேயிலை விற்பனை நிலையத்தின் தேயிலை விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறாமையாலும் கடந்த வருடத்திற்கு ஒப்பாக இலாபமும் வீழ்ச்சியடைந்துள்ளது. | |
| (இ) | வருடாந்த பூர்த்தி தேயிலை 1,020,000 கிலோகிராம்கள் எனும் ஒட்டுமொத்த தொழிற்சாலை இயலளவுடன் புனித ஜோக்கிம் தோட்டத்தின் கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் அந்த இயலளவின் 72 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலும் குறை இயலளவுடன் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீள் பயிரிடுவதற்கு நிறுவனத்தின் கவனம் செலுத்துதல் குறைவடைந்தமை இந்த குறை பயன்பாட்டு நிலைமை ஏற்படுத்துவதற்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | தொழிற்சாலையின் இயந்திர உபகரணங்களில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையிலும் மற்றும் செயற்படு மூலதன பற்றாக்குறை அடிப்படையில் தொழிற்சாலையின் நட்டத்தை குறைப்பதற்கு குறைந்த இயலளவுடன் செயற்படுவதற்கும் நிறப்பிரிப்பு இயந்திரத்தினை நிறுவி அதன் மூலம் கிடைக்கும் விலையின் அடிப்படையில் இயலளவினை அதிகரிப்பதற்கும் தோட்டம் தொடர்பிலான மதியுரை குழு பரிந்துரைத்திருந்தது. பூர்த்தி தேயிலையின் தரத்தினை அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான நிறப்பிரிப்பு இயந்திரம் 2021 ஒக்தோபர் மாதம் கொள்வவு செய்யப்பட்டதுடன் அதன் மூலம் தோட்டத்தின் பூர்த்தி தேயிலையின் தரம் | மீள் பயிரிடுவதற்கும் பாழடைந்த சாகுபடியை அதிகரிக்க தேவையான மூலதன நிதியேற்பாட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அதிகரித்துள்ளது.

தோட்டம் தொடர்பிலான மதியுரை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நாளாந்த பச்சை தேயிலை கொழுந்து உள்ளீடு 3,000-3500 கிலோ கிராம்களுக்கு இடைப்பட்ட இயலளவுடன் கடந்த வருடத்தின் தொழிற்சாலை செயற்பட்டதுடன் இதுவரையிலும் அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நாளாந்தம் பச்சை தேயிலை உள்ளீடானது 5,000 கிலோகிராம்கள் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இரத்தினபுரி பிரதேசத்தின் தேயிலை உற்பத்தி தொழிற்சாலையில் அதிகளவில் காணப்படுவதுடன் தனியார் துறையின் தேயிலை தொழிற்சாலைகளுடன் தேயிலை கொழுந்துக்கு பெருமளவிலான போட்டித்தன்மைக்கு முகங்கொடுக்க நேர்கின்றமையால் குறைந்த அளவிலான செயற்படு மூலதனத்தின் கீழ் பச்சை தேயிலை கொழுந்தினை கொள்வனவு செய்ய நேர்ந்தமையும் தொழிற்சாலை ஆகக் குறைந்த இயலளவுடன் செயற்படுவதற்கு தாக்கமளித்துள்ளது.

அதற்கமைய எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்கும் தொழிற்சாலை உச்ச இயலளவுடன் பேணிச் செல்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம். மூலதன நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தால் மீள் பயிரிடல் நடவடிக்கைகள் பல

வருடங்களாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் 5.02 ஹெக்டேயர்கள் பரப்பளவில் தேயிலை பயிரிடுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பதவியணி நலன்புரி நிதியம் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 27 (1) பிரிவின் கீழ் 1959 ஜூன் 01 ஆம் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்ட நலன்புரி நிதியம் ஒன்றாக 2014 ஒக்தோபர் 30 ஆம் திகதி தொழில் ஆணையாளரால் சான்றுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நலன்புரி நிதியத்தின் முகாமைத்துவம் சட்டக்கோவையின் 04 (i) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நம்பிக்கை பொறுப்புச் சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் (நம்பிக்கை பொறுப்புச்சபையின் தலைவர்), பணிப்பளார்கள் 02 பேர் மற்றும் நிதியத்தின் இரு அங்கத்தவர்களும் இலங்கை தேயிலை சபையினால் பெயரிடப்பட்ட நிதிய அங்கத்துவத்தினை வகிக்காத இரு உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 07 அங்கத்தவர்களை கொண்டிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கடன் பணத்தை பெற்றுக்கொள்ளும் போது அல்லது அங்கத்தவர் ஒருவரின் அங்கத்துவத்தினை கலைக்கும் சந்தர்ப்பத்தில் | தேயிலை ஆராய்ச்சி நிறுவன பதவியணி நலன்புரி நிதிய விஞ்ஞாபனத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் உருவாகி இருந்த சிக்கலான நிலைமையை தீர்ப்பதற்கு 2021.12.31 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுச்சபை கூட்டத்தில் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையை திருத்தி அமைப்பதற்கு உரிய முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த திருத்தப்பட்ட விஞ்ஞாபனத்திற்கு அனுமதிக்காக 2022.06.23 மற்றும் 2022.07.25 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் தொழில் ஆணையாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு கூடிய விரைவில் திருத்தப்பட்ட அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | தற்போதுள்ள சிக்கலை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனாவசியமான காலம் கடத்தல், ஆவணங்கள் தொலைந்து போகக்கூடியமை, நிறுவனத்தின் பிரச்சினைக்குரிய நிலைமைகள் வெளிவாரி தரப்பினருக்கு தெரிய வருதல் போன்ற விடயங்கள் காரணமாக வெளிவாரி அங்கத்தவர்கள் இருவரின் தேவைப்பாடு இல்லையென கூறி தேயிலை சபையின் அங்கத்தவர்கள் இருவர் இதுவரையிலும் இக்குழுவில் உள்ளடக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு சபை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காது நலன்புரி நிதியத்தின் பணிகளை முன்னெடுத்துச்சென்றவாறு இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | புனித கூம்பஸ் தோட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டிலான நலிவுகள் காரணமாக 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த நிதி மோசடியினால் இழக்கப்பட்ட தொகையான ரூபா.10,276,628 தொகை கடன் பட்டோர் மீதியினுள் காணப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை பணிகளை நிறைவு செய்து நட்டத்தினை அறவிடுவதற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது. | நிதி மோசடி தொடர்பில் இருவர் அடங்கிய குழுவொன்றின் மூலம் ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டன. அந்த அறிக்கை தேயிலை ஆராய்ச்சி சபையின் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதில் எடுக்கப்பட்ட தீர்மானமானது தோட்ட அதிகாரம், பிரதான எழுது வினைஞர் மற்றும் கனிஷ்ட உதவி எழுது வினைஞர் ஆகியோரின் பணியினை வரிதாக்கி குற்றப்பத்திரிகை வெளியிடுமாறு ஆகும். அதற்கமைய அந்த குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் குற்றப்பத்திரங்கள் வெளியிடப்பட்டதுடன் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டு ஒழுக்காற்று கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளது. | நிதி மோசடி தொடர்பான விசாரணை விசாரணையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக முன்னாள் பிரதட எழுது வினைஞர் மற்றும் கனிஷ்ட உதவி எழுது வினைஞர்களின் இறுதி விசாரணை அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஒன்று ஏற்பட்டது. நிறுவனத்தினால் மேற்படி விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வணிக மோசடி விசாரணை அலகிற்கு முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இதுவரையிலும் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் B/611/2019 இன் கீழ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மூலம் விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ள. நி.பி.(104) மற்றும் நி.பி. (105) அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளது.<br><br>மேலும் இந்த நிதி மோசடி தொடர்பில் கனிஷ்ட உதவி எழுது வினைஞருக்கு எதிராக நிறுவனத்தினால் சிவில் வழக்கொன்று தொடருவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 36 நிலவிய போதும் அவற்றுள் 26 | பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி உள்ளக பதவியுயர்வொன்றாவதுடன், தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்காக | வெற்றிடம் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அத்தியாவசிய பணிகளை |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களிடையே 04 பிரிவுத் தலைவர் பதவிகளும் 13 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளும், 05 பிரதான மதியுரை உத்தியோகத்தர் பதவிகளும் உள்ளக பதவியுயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களாவதுடன், தகைமையுடைய உத்தியோகத்தர்கள் காணப்படாமையால் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. அவ்வாறே செயற்பாட்டு மற்றும் மதியுரை பதவிகளின் 52 சதவீதமும் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பமல்லாத முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் 63 சதவீதமும் வெற்றிடமாக காணப்பட்டது. | 2022 ஆகஸ்ட் மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. பிரதான மதியுரை உத்தியோகத்தர் பதவியானது உள்ளக பதவியுயர்வொன்றாவதுடன், அந்த பதவிக்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்த உள்ளக விண்ணப்பதாரிகள் காணப்படவில்லை. | துரிதமாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் (OIC) பதவி இல்லாதிருந்த போதிலும் அந்த பதவிகளின் பதிற் கடமைகளுக்காக 06 உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு பதிற் கடமை பணிகளாக மீளாய்வாண்டினுள் ரூபா.360,000 செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா.4,073,802 ஆகும். | இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் பொறுப்பான பதவிகள் நிறுவப்படவில்லை, மேலும் சேவைகளை எளிதாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் இடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் பதவிகளில் கடமைகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர், ஆலோசனை அதிகாரி மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர் ஆகிய பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் ஆகும்.<br><br>இடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் 24 மணி | கொடுப்பனவுகளுக்கான திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறுவனத்தின் தேவைப்பாட்டுக்கு பொருத்தமான வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நேரம் முழுவதும் குறித்த நிலையத்தின் பணிகளுக்குரிய பொறுப்புகள் வகிக்கப்படும். மேலும், ஆலோசனை மற்றும் விரிவாக்க பணிகள், ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணிகள், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் வருமான ஈட்டும் செயற்திட்ட ஒருங்கிணைத்தல் பணிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள், செக்ரோல் ஊழியர்களின் சம்பளம் செலுத்தும் பணிகள் மற்றும் அலுவலக வளாகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பொறுப்பாக இருத்தல் இடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும். தமது கடமைகளுக்குரிய அதன் பதவிகளால் மேற்கொள்ளப்படும் கடமைகளுக்கு மேலதிகமாக, மேற்கொள்ளப்படும் இடப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் கடமைகளுக்காக தேயிலை ஆராய்ச்சி சபையின் ஒப்புதலின் ஒப்புதலுக்கு தொடர்புடைய கொடுப்பனவு வழங்கப்படும். குறித்த கட்டணத்தை செலுத்துவதற்கான ஒப்புதலுக்காக பெருந்தோட்ட அமைச்சின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கமைய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுடன் இடப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியொன்று உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 180 நாட்களை கடந்திரந்த 92 ஊழியர்கள் 2014 ஒக்தொபர் 24 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் பதவியணிக்கு உள்ளடக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளபட்டிருக்க வில்லை. | 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் பெற்ற ஊழியர்கள் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களை கோரி பெருந்தோட்ட அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | 2014 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஊழியர்களை பதவியணியில் உள்ளடக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சபையின் செயல் நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள தற்போது செயற்படும் 101 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் காணப்பட்டன. கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களிடையே தேயிலை துறையில் நிபுணத்துவத்துடன் மனிதவள பற்றாக்குறை காரணமாக 2021 ஆம் ஆண்டளவில் 07 ஆராய்ச்சிய நிகழ்ச்சி திட்டங்களும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ரூபா 40,498,203 | தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனங்களால் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொடங்கப்படும் பெருந்தோட்டப் பயிர் ஆராய்ச்சிக் கருத்தரங்கம், (Plantation Crop Research Symposium) 2021 ஆம் ஆண்டில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், 2020 - 2021 ஆம் ஆண்டுகளில் அனைத்து அன்றாட நடவடிக்கைகளையும் உலகம் முழுவதும் Covid 19 தொற்றின் 3 நிலைகள் பணி மற்றும் | ஒத்திவைக்கப்பட்ட அல்லது கைவிடப்பட்ட ஆராய்ச்சி திட்டங்கள் உட்பட அனைத்து திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியை திறம்பட பயன்படுத்தவும் மேலும் பயனுள்ள தகவல்களை பரப்பவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

செலவிடப்பட்டு 26 ஆராய்ச்சி நிகழ்ச்சி திட்டங்களும் பிற்போடப்பட்டு அல்லது கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த 03 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் நிதி மற்றும் திட்டமிடல் வளங்கள் பற்றாக்குறையாக காணப்பட்ட காரணத்தால் ஆரம்பிக்காது இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சிகள் தொடர்பில் பிரசுரித்தல், கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் (Symposium) நடாத்துவதற்கு மீளாய்வாண்டிற்கு உரிய நிதியேட்பாடான ரூபா 2,500,000 தொகையில் 89 சதவீதம் பயன்படுத்தப்பட்டிராததுடன் கடந்த 02-03 வருடங்களினுள் மாநாடுகள் (Symposium) நடாத்தப்பட்டிருக்கவில்லை.

செயல்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாலும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் சுமார் ஒரு மாத காலம் மூடப்பட்டிருந்ததாலும் (lockdown) பெருந்தோட்டம் தொடர்பான கல்வி மாநாடுகளை நடத்துவதும் ஏற்பாடு செய்வதும் கடினமான பணியாக இருந்தது.

அவ்வாறான போதிலும், வரிசை அமைச்சு மற்றும் பிற தென்னை, இரப்பர் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் கூட்டம் அடுத்த ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலையீட்டுடன் தேயிலை தொடர்பான சர்வதேச மாநாட்டை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.